# 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கலப்புத் தேர்தல் முறையும் அதன் விளைவுகளும் : யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களினை மையப்படுத்திய ஒரு விமர்சனப் பகுப்பாய்வு

ரீ. விக்னேஸ்வரன்


## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் அரசியல் அதிகாரத்தினை பிரயோகிக்க கூடிய அரசியல் கட்டமைப்புக்களில் உள்ளூராட்சி கீழ் நிலைக் கட்டமைப்பாக வரலாற்று ரீதியாக நீண்டகாலம் தொழிற்பட்டு வருவதனைக் காணலாம். இவ் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற தேர்தல் முறைமைகளும் காலத்துக்கு காலம் திருத்தங்களுக்கு உட்பட்டு வந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் புதிய தேர்தல் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அந்த வகையில் 2018ம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கென வட்டார ரீதியிலான பிரதிநிதித்துவம் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்கின்ற தேர்தல் முறைமைகளினைக் கலந்து 60:40 என்கின்ற வகையில் கலப்புத் தேர்தல் முறையின் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. இத்தகைய பின்னணியில் ஏற்கனவே இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் குறைபாடுகள், வட்டாரங்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய பிரதிநிதியினைத் தெரிவு செய்தல், பெண் பிரதிநிதிகளது எண்ணிக்கையினை அதிகரித்தல், பிரதேச அபிவிருத்தியின் தொடர்ச்சித்தன்மை போன்ற இலக்குகளினைக் கொண்டு உருவாக்கப்பட்ட வட்டார மற்றும் விகிதாசார முறையிலான கலப்புத் தேர்தல் முறை தனது இலக்குகளினை முழுமையாக அடைந்ததா? தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்கு பின்னருமான குறை நிறைகள் எவை என்பதனை அடையாளம் கண்டு குறைகளினை நீக்குவதற்கும் நிறைகளினை பலப்படுத்துவதற்கும் அல்லது அதிகரிப்பதற்குமான உபாயங்களினையும் வழிமுறைகளினையும் இனங்கண்டு பரிந்துரைப்பதுடன் எதிர்காலத்தில் உள்ளூராட்சிக்கான பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் பிரதேச அபிவிருத்தியினை கருத்திற் கொண்டு எத்தகைய தேர்தல் முறையினூடாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதனையும் இவ் ஆய்வுக்கட்டுரை பரிந்துரைக்கின்றது. இதற்காக சமூக விஞ்ஞான ஆய்வு முறையான ஒப்பீட்டு விமர்சனப் பகுப்பாய்வு முறையினை பின்பற்றி இவ் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.


திறவுச் சொற்கள் : உள்ளூராட்சி, தேர்தல் முறைமை, மக்கள் பிரதிநிதி மற்றும் பிரதேச அபிவிருத்தி

## அறிமுகம்

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளதுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதி நிதிகளைத் தெரிவு செய்கின்ற தேர்தல் முறைமையும் காலத்துக்கு காலம் மாற்றப் பட்டு புதிய தேர்தல் முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டும் வந்துள்ளன. அந்த வகையில் இலங்கையில் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முறைமையானது வட்டார ரீதியான எளிய பெரும்பான்மை மற்றும் விகிதாசாரப் பிரதி நிதித்துவம் என்கின்ற இரண்டு வேறுபட்ட தேர்தல் முறைமைகளினை உள்ளடக்கிய கலப்பு

முறையிலான தேர்தலினூடாக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு கட்சிகள் ஆட்சிய மைத்து உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கி வருகின்றன. இத்தகைய பின்ன ணியில் இத் தேர்தல் முறையின் பலங்கள், பலவீனங்கள், புதிய தேர்தல் முறையில் உள்வாங்கப்பட வேண்டிய சீர்திருத்தங்கள், முன்னைய விகிதாசார முறைமையின் பலங்கள் மற்றும் பலவீனங்கள், மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்தமை போன்ற விடயங்கள் பற்றி பல்வேறு வாதப்பிரதி வாதங்களும் ஆராய்சிகளும் தற்போது இடம்பெற்று வருகின்ற புறச்சூழ்நிலையில் இவ் ஆய்வுக் கட்டுரையானது 2018ஆம் ஆண்டு இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறை பற்றியும் அதன் விளைவுகள் தொடர்பாகவும் ஆராய்வதாகவுள்ளது.

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் நீண்டகாலமாக செயற்பட்டு வந்துள்ளன என்பதற்கு வரலாற்று ரீதியான ஆவணங்கள் உண்டு. குறிப்பாக புராதன காலத்திலும் மத்திய காலங்களிலும் இலங்கையில் தன்னாட்சி அமைப்புக்கள் செயற்பட்டு வந்தன என்றும் அவ்வகை தன்னாட்சி அமைப்புக் களே இன்று உள்ளூராட்சி மன்றங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன. (Abhayewardhana; 1999:01) உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகள் காலத்துக்கு காலம் வேறுபட்ட தேர்தல் முறைகளினூடாக தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர். உள்ளூராட்சி அரசாங்கங்கள் எனப்படுபவை உள்ளூர் விடயங்களினை ஒழுங்குபடுத்தி நிர்வகிக் கின்ற சுயாதீனமான ஆனால் இறைமையற்ற ஜனநாயக ரீதியான குழு மங்களினைக் குறித்து நிற்கின்றது. (மணிவாசகர்;1994,01) என விளங்கிக் கொள்ளலாம். உள்ளூராட்சி மன்றங்கள் கீழ் நிலை அரசியல் ஒழுங்கமைப்பாக மக்க ளுடன் நேரடியாகத் தொடர்புபட்டு மக்கள் சேவையாற்றி வருவதனால் உள்ளூராட்சி அமைப்புக்களும் அவற்றுக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற தேர்தல் முறையும் சிறப்பாக இருக்க வேண்டும் என பொதுமக்கள் எண்ணுகின்றனர். உள்ளூ ராட்சி அரசாங்கங்களுக்கான பிரதிநிதிகள் குறித்த உள்ளூராட்சி மன்றம் பராமரிக்கின்ற அல்லது குறித்த உள்ளூராட்சி பிரதேசத்தின் எல்லைக்குட்பட்ட ஓர் ஆளுமை மிக்க நபர் தெரிவு செய்யப்படுவதற்கு தேர்தல் முறைமை அனுசரனை வழங்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த வகையில் 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களுக் கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வ தற்கான அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கலப்பு முறையிலான தேர்தல் பல நன்மைகளி னையும் தீமைகளினையும் கொண்டுள் ளதனைக் காணலாம்.

## ஆய்வு முறையியல்

2018ஆம் ஆண்டு நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதி நிதி களை தெரிவுசெய்வதற்காக நடாத்தப்பட்ட கலப்பு முறையிலான தேர்தல் தொடர்பாக விமர்சனங்கள் பல தரப்பினராலும் தொடர்ச் சியாக முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக் கின்ற சூழ்நிலையில் இப் புதிய கலப்பு தேர்தல் முறையிலுள்ள சாதக மற்றும் பாதக அம்சங்களினை இனங்கண்டு வெளிக் கொணர்கின்ற நோக்கிலும் மனிதனது தேர்தல் கால நடத்தையில் தேர்தல் முறைமையின் வகிபங்கினையும் இனங்காண்கின்ற வகை யிலும் இவ் ஆய்வானது முன்னெடுக்கப் படுகின்றது. எழுமாற்று அடிப்படையில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களினை தெரிவு செய்து ஆராயப்படுகின்றது. இவ் ஆய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகளாக 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக உள்ளூராட்சி மற்றும் தேர்தல் முறைமைகள் பற்றிய நூல்கள்,

ஆய்வுக்கட்டுரைகள், தேசிய பத்திரி கைகளில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற் குறிப்பிட்ட முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளினைப் பயன்படுத்தியும் முன்னைய விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் நன்மை தீமைகளினை ஆராய்ந்து கருத்திற் கொண்டு ஒப்பீட்டு விமர்சன பகுப்பாய்வு முறையினூடாக இவ் ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்பொழுது தொழிற்படுகின்ற உள்ளூராட்சி கட்டமைப்பும்புதிய கலப்பு முறையிலான தேர்தலும் இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி கட்டமைப்பில் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபை என்பன உள்ளூராட்சித் தாபனங்களாகும். பொதுவாக பெரிய நகரம் ஒன்றில் நிர்வாக செயற்பாடுகளுக்காக மாநகரசபைகளும், நகரம் ஒன்றின் இயல்புகள் குறைவாக காணப்படுகின்ற பிரதேசங்களுக்கென நகரசபைகளும், கிராமப் பகுதிகளுக்கென பிரதேச சபைகளும் நிறுவப்பட்டுள்ளன. (Abhayewardhana; 1999,35) இன்று இலங்கையில் 25 மாநகர சபைகளும், 40 நகர சபைகளும் 276 பிரதேச சபைகளும் உள்ளடங்கலாக 341 உள்ளூராட்சி சபைகள் தொழிற்பட்டு வருகின்றன. (Local Authorities, 2018) 2018ஆம் ஆண்டு கலப்புத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட முன்னர் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான தேர்தலினூடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். புதிய கலப்புத் தேர்தல் முறையானது 60:40 என்கின்ற விகிதாசாரத்தில் 60 வீதமான மக்கள் பிரதிநிதிகள் வட்டாரங்களிலிருந்து சாதாரண பெரும்பான்மை முறையின் மூலமும் ஏனைய 40 வீதமான பிரதிநிதிகள் கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதங்களுக்கு ஏற்ப விகிதாசார முறைப்படியும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். சாதாரண பெரும்பான்மை முறை எனப்படுவது வாக்காளரானவர் குறித்த தொகுதியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் தாம் விரும்பிய ஒருவருக்கு வாக்களிப்பார். இங்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் அவர்கள் கட்சி சார்பாகவோ அல்லது சுயேட்சையாகவோ போட்டியிடலாம். போட்டியிடுகின்றவர்களில் யார் கூடுதலான வாக்குகளினைப் பெறுகின்றாரோ அவரே வெற்றி பெற்றவராக கருதப்படுவார். (இரகுநாதன்., 2008:42) இதனால் இம்முறையினை First-Past-The Post System என அழைக்கப்படுவதும் உண்டு.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது எளிய பெரும்பான்மை முறைமையிலான (Simple majority system) தேர்தல் முறையில் காணப்பட்ட குறைபாடுகளினை நிவர்த்தி செய்கின்ற முகமாக உலக நாடுகள் பயன்படுத்தி வருகின்ற ஒரு தேர்தல் முறையாகவுள்ளது. விகிதாசாரப் பிரிநிதித்துவ தேர்தல் முறையின் பிரகாரம் வாக்காளர் ஒரு கட்சி அல்லது குழு தயாரித்த வேட்பாளர்களினை உள்ளடக்கிய பட்டியலுக்கே வாக்களிப்பார். ஒவ்வொரு பட்டியலுக்கும் கிடைக்கப்பெறுகின்ற வாக்குகளில் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இங்கு விகிதாசாரமானது அந்தந்த நாடுகளினால் பின் பற்றப்படுகின்ற கணிப்பீட்டு முறைக்கு (Formula) ஏற்றவாறும் குறிப்பிட்ட தேர்தல் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய அங்கத்தவர்களுக்கு ஏற்றவாறும் சட்டசபையில் பிரதிபலிக்கின்றது. இங்கு வேட்பாளராக தெரிவு செய்யப்படுவதற்கான குறைந்த தகுதியானது தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களது எண்ணிக்கையினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. (இரகுநாதன்; 2008: 56) பல்லின சமூகங்களினைக் கொண்ட நாடுகளுக்கு சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துகின்ற ஒரு தேர்தல் முறையாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை இனங்காணப்

படுகின்றது. சாதாரண பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை இரண்டினையும் வட்டார அடிப்படையில் 60:40 என்கின்ற விகிதத்தில் கலந்து நடாத்தப்பட்ட புதிய தேர்தல் முறையினை கலப்புத் தேர்தல் முறையின் வகைப்பாடுகளில் ஒன்றான கூட்டிணைவு முறையில் நடைபெற்றுள்ள தனை அவதானிக்கலாம். இத் தேர்தல் முறைப்படி ஒரு தேர்தல் தொகுதியில் இரு தேர்தல் முறைகளும் ஒரே நேரத்தில் ஒருங்கி ணைந்தே பிரயோகிக்கப்படுகின்றன. இம் முறை பிரான்ஸ் நாட்டிலுள்ள மாநகர சபைகளுக்கான தேர்தலில் மட்டும் பயன்படுத்தப் பட்டு வருவதனைக் காணலாம். இங்கு 3500 இற்கு மேற்பட்ட மக்கள் தொகையினைக் கொண்ட ஒவ்வொரு மாநகரசபையும் தேர்தல் தொகுதிகளாகக் கொள்ளப்படுகின்றது. (இரகுநாதன்; 2008:65) இத் தேர்தல் முறையானது சாதாரண வாக்காளர்களினால் விளங்கிக் கொள்வதற்கு கடினமான ஒரு தேர்தல் முறையாக உள்ளது.

### 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் முறையும் அதன் விளைவுகளும்

இலங்கையின் அடிமட்ட அரசியல் நிர்வாகக் கட்டமைப்பான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறுகிய கால இடைவெளிக்குப் பின்னர் எல்பிட்டிய பிரதேச சபை நீங்கலாக ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக 10ம் திகதி பெப்ரவரி மாதம் 2018ஆம் ஆண்டு இடம்பெற்றது. (The Department of Information, 2018) இத் தேர்தலே இலங்கையின் உள்ளூராட்சி வரலாற்றில் இடம்பெற்ற பெரிய தேர்தலாகவும் அதிக மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்த தேர்தலாகவும் பதிவாகியுள்ளது, இதனால் இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயக மரபில் இத் தேர்தல் விசேடமான ஒன்றாக கணிக்கப்படுகின்றது. இத் தேர்தலானது வட்டார ரீதியிலான எளிய பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் 60:40 என்கின்ற அடிப்படையில் 25 மாநகர சபைகள், 40 நகரசபைகள், 275 பிரதேச சபைகளுக்கான மக்கள் பிரதிநிதிகளினைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்டு 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8327 பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப் பட்டனர். (The Department of Information., 2018) புதிய தேர்தல் முறை பெண்களுக்கு உள்ளூராட்சி சபைகளில் 25% ஆசனங்கள் ஒதுக்கப்பட்டமை, நடைமுறையிலுள்ள மைத்திரிபால சிறிசேனாவின் அரசாங்கத்திற்கான மக்கள் ஆதரவின் அளவினை அறிந்து கொள்ளுதல், முன்னைய ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவின் மீள் அரசியல் பிரவேசம், இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சிக்கான மக்கள் அங்கீகாரம் போன்ற நேரடி மற்றும் மறைமுகக் காரணங்களினால் இவ் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் ஆர்வம் காணப்பட்டது. தனித்து உள்ளூராட்சித் தேர்தலாக மட்டுமன்றி பல அரசியல் விடயங்களுக்கான கருத்துக் கணிப்பாகவுமே இத்தேர்தல் ஆய்வாளர்களினால் இனங்காணப்பட்டது. இதனால் நாடளாவிய ரீதியில் 65 வீதமான வாக்குப்பதிகள் இடம்பெற்றிருந்தன. (Manjula Fernando., 2018) மேற்குறிப்பிட்ட பின்னணியில் இடம்பெற்ற இவ் உள்ளூராட்சித் தேர்தலானது தேசிய மற்றும் கட்சி அரசியலில் ஏற்படுத்திய விளைவுகள், மக்கள் இத் தேர்தல் முறை தொடர்பாக கொண்டுள்ள அபிப்பிராயம், புதிய தேர்தல் முறையின் நன்மை தீமைகள் போன்ற விடயங்களினை ஆய்வு செய்வதற்காக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள 01 மாநகரசபை, 3 நகரசபைகள், 13 பிரதேச சபைகள் உள்ளடங்கலாக 17 உள்ளூராட்சி மன்றங்களினையும் அவற்றின் தேர்தல் முடிவுகளினையும் விடய ஆய்வாக கொண்டு ஆராயப்படுகின்றது.

## யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளுராட்சி மன்றங்களில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சிகளும் அதன் விபரங்களும்

| இல | உள்ளுராட்சி மன்றங்கள் | அதிக ஆசனங்களினைப் பெற்ற கட்சிகள் | ஆசனங்களும் வாக்குகளின் எண்ணிக்கையும் | சபைக்கான மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| 01. | நல்லூர் பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 6<br>5653 (31.87%) | 20 |
| 02. | யாழ்ப்பாண மாநகர சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 16<br>14424 (35.76%) | 45 |
| 03. | வலிகாமம் தெற்கு பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 11<br>12300 (35.09%) | 30 |
| 04. | வலிகாமம் வடக்கு பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 17<br>9414 (37.72%) | 39 |
| 05. | வலிகாமம் மேற்கு பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 09<br>8963 (35.77%) | 25 |
| 06. | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 15<br>8119 (34.44%) | 38 |
| 07. | வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 12<br>10641 (4159%) | 28 |
| 08. | காரைநகர் பிரதேச சபை | அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் (AITC) | 1623 (27.84%) | 3 11 |
| 09. | சாவகச்சேரி நகர சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 6<br>2779 (31.39%) | 18 |
| 10. | சாவகச்சேரி பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 13<br>9672 (37.04%) | 31 |
| 11. | பருத்தித்துறை பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 8<br>6532 (33.32%) | 21 |
| 12. | பருத்தித்துறை நகர சபை | அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் (AITC) | 6<br>2199 (37.2%) | 15 |
| 13. | வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 9<br>6206 (28.16%) | 31 |

| இல | உள்ளூராட்சி மன்றங்கள் | அதிக ஆசனங்களினைப் பெற்ற கட்சிகள் | ஆசனங்களும் வாக்குகளின் எண்ணிக்கையும் | சபைக்கான மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| 14. | வல்வெட்டித்துறை நகர சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 7<br>1322 (31.7%) | 17 |
| 15. | ஊர்காவற்றுறை பிரதேச சபை | ஈழமக்கள் ஜன நாயகக்கட்சி (EPDP) | 7<br>2884 (51.02%) | 13 |
| 16. | வேலணைப் பிரதேச சபை | இலங்கை தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 8<br>3627 (39.08%) | 20 |
| 17. | நெடுந்தீவு பிரதேச சபை சபை | ஈழுமக்கள் ஜன நாயகக்கட்சி (EPDP) | 6<br>1246 (49.7%) | 13 |

மூலம் : தகவல் திணைக்களம் கொழும்பு - 2018

2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 415மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (The Department of Information., 2018) 17 உள்ளூராட்சி மன்றங்களில் ஊர்காவற்துறை பிரதேச சபை மட்டுமே ஈழமக்கள் ஜனநாயக கட்சியினால் சபை உறுப்பினர்களது எண்ணிக்கையில் தனித்து பெரும்பான்மை ஆசனங்களினைக் கைப்பற்றி ஆட்சியமைக்க முடிந்தது. குறிப்பாக இச் சபைக்கான மொத்த 13 உறுப்பினர்களில் 07 உறுப்பினர் களினை 1322 வாக்குகளின் ஊடாக பெற்றுக் கொண்டது. ஏனைய 16 உள்ளூராட்சி சபைகளில் எந்தவொரு சபையினதும் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மை உறுப்பினர்களினை அதாவது அரைவாசிக்கு மேல் எந்தவொரு கட்சியினாலும் இக் கலப்பு முறைத் தேர்தலினூடாக பெற்றுக்கொள்ள முடிய வில்லை. (The Department of Information., 2018) ஊர்காவற்துறை பிரதேச சபை மற்றும் வேலணை பிரதேச சபை ஆகிய இரண்டு சபைகளிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆட்சியமைக்க ஏனைய 15 உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி (ITAK) ஏனைய கட்சிகளது ஒத்துழைப்புடனும் உடன்பாட்டுடனும் ஆட்சியமைத்துள்ளமை யினைக் காணலாம். இவ் ஆட்சியமைக்கின்ற நடவடிக்கைகள் கூட பல்வேறு கட்சி அரசியல் செயற்பாடுகள், இழுபறி நிலைகள், பேரம் பேசல்கள் என்பவற்றினைக் கடந்தே ஆட்சியமைக்க முடிந்தது. ஏனெனில் இக் கலப்பு முறைத் தேர்தலானது எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்க ளினைக் கைப்பற்றி இஸ்திரமான ஆட்சிய மைக்கக் கூடிய நிலையினை ஏற்படுத்த வில்லை. மாறாக ஒரு தொங்கு நிலையி னையே கட்சிகள் எதிர்நோக்க வேண்டியி ருந்தது. (Javid Yusuf;2018) இன்று உள்ளூராட்சி சபைகளில் கட்சிகள் ஆட்சியமைத்து சபை அமர்வுகள் இடம்பெறுகின்ற பொழுதும் இஸ்திரமான ஆட்சியாக இதனை கருத முடியாது. இத்தகைய நிலையானது வரவு செலவுத்திட்டம் தயாரித்தல், அபிவிருத்தி திட்டங்களினை முன்மொழிதல், செயற் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு போன்ற விடயங்களில் எதிர்காலத்தில் கட்சி அரசியல் செயற்பாடுகளினை அவதானிக்க முடியும். இது உள்ளூராட்சி சபைகளது நிலை பேற்றுத் தன்மையினையும் நிலையானதும் தொடர்ச்

சியானதுமான உள்ளூராட்சியினைக் கேள் விக்குள்ளாக்கலாம்.

## புதிய கலப்பு தேர்தல் முறையிலுள்ள சாதக மற்றும் பாதக அம்சங்கள்

உள்ளூராட்சி மன்றங்களுக்கான முன்னைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையில் இனங்காணப்பட்ட பலவீனங்களான ஒரு உள்ளூராட்சி பிரதேசத்தினை ஒரு தொகுதியாகக் கொண்டு விகிதாசார முறைப்படி தேர்தல்கள் நடாத்தப்படுவதனால் குறித்த உள்ளூராட்சி மன்றத்தினது அனைத்து பிரதேசங்களிலும் இருந்து பிரதிநிதிகளினைத் தெரிவு செய்வதனை உறுதிப்படுத்த முடியாமை, பிரதி நிதிகள் பொறுப்புக் கூறலினை கருத்திற்கொள்ளாமை, விருப்பு வாக்குகளுக்காக கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான முரண்பாடு போன்ற காரணங்களினைக் கருத்திற் கொண்டு 60:40 என்ற கலப்புத் தேர்தல் முறையானது அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தேர்தல் முறைப்படி ஒரு உள்ளூராட்சி பிரதேசம் பல வட்டாரங்களாக பிரிக்கப்படுவதனால் குறித்த உள்ளூராட்சியின் ஆளுகைப்பிரதேசம் அனைத்திலிருந்தும் பிரதிநிதிகளினை தெரிவு செய்ய முடிவதுடன் குறித்த பிரதிநிதிகள் அந்தந்த வட்டார மக்களுக்கு பொறுப்புக் கூறக் கூடியவர்களாக காணப்படுவர். வட்டார அடிப்படையிலான கட்சிகளதும் சுயேட்சை குழுக்களும் மொத்த வட்டாரங்களில் 10% பெண் வேட்பாளர்களாக இருக்க வேண்டும் என்பதுடன் விகிதாசார பெயர்ப்பட்டியலில் 25% பெண் வேட்பாளர்களினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இதனால் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் 25% பெண்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்பது இத் தேர்தல் சட்டம். (The Department of Information; 2018) இது பெண்களது அரசியல் பங்குபற்றுதலினை அதிகரிக்கச் செய்வதாகவும் பெண்களுக்கான அரசியல் பயிற்சிக்களமாக உள்ளூராட்சி மன்றங்கள் மாற்றப்படவும் வாய்ப்பாகியது. இத் தேர்தல் முறையில் தனிநபர் விருப்பு வாக்கு செல்வாக்கு இழந்தமையினால் கட்சிகளது வேட்பாளர்களுக்கிடையிலான முரண்பாடுகளும் தனிநபர் நலன்சார் அரசியல் செயற்பாடுகளும் குறைக்கப்பட்டமை, முன்னைய விகிதாசார தேர்தல் முறையினை விட இத் தேர்தல் முறையினூடாக மக்கள் பிரதிநிதிகளது எண்ணிக்கை தேசிய ரீதியில் இரட்டிப்பாக அதிகரித்துள்ளமை உள்ளூராட்சி சபைகளினது பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகளில் அனைத்து தரப்பு மக்களது விருப்பு வெறுப்புக்கள் பிரதிபலிக்க வாய்ப்பாக அமைந்தமை போன்ற சாதகமான அம்சங்களினைப் புதிய கலப்பு முறையிலான தேர்தல் கொண்டுள்ள போதும் இத் தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகள் பலவீனங்கள் என்பன உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் ஆய்வாளர்களினால் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றன.

இப் புதிய கலப்புத் தேர்தல் முறையின் பாதகமான அம்சங்கள் அல்லது பலவீனங்களாக பின்வரும் விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதனைக் காணலாம். இஸ்திரமான ஆட்சியினை அமைப்பதில் அரசியல் கட்சிகள் எதிர் நோக்கிய பிரச்சனைகள் சிறிய கட்சிகளுக்கும் பிரதி நிதித்துவம் கிடைப்பதனாலும் வட்டார ரீதியில் வெற்றிபெற்ற கட்சிகளுக்கு போனஸ் ஆசனம் உள்ளிட்ட எந்தவொரு சலுகைகளும் இத் தேர்தல் முறையில் வழங்கப்படாமை. குறிப்பாக இலங்கையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின் பிரகாரம் 199 உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து எந்தவொரு கட்சியினாலும் ஆட்சியமைக்க முடியவில்லை. (Nimal Sanderatna; 2018) உள்ளூராட்சி சபைகளுக்கான மக்கள் பிரதிநிதிகள்

முன்னைய தேர்தல் முறையுடன் ஒப்பிடுகின் றவிடத்து இரட்டிப்பாக அதிகரித்துள்ளமை குறிப்பாக 8327 உறுப்பினர்கள் இறுதியாக நடந்த உள்ளூராட்சி தேர்தலில் 340 சபை களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். விசேடமாக கொழும்பு மாநகரசபையின் மக்கள் பிரதிநிதிகளது எண்ணிக்கையானது 119 ஆக அதிகரித்துள்ளது. (The Department of Information; 2018), 25% பெண் பிரதிநிதி களினை ஒவ்வொரு உள்ளூராட்சி சபை களும் கொண்டிருக்க வேண்டும் என்பதனால் உள்ளூராட்சி தொடர்பான அறிவு, ஆற்றல் மற்றும் ஆர்வமற்ற பெண்களினை வலிந்து உள்ளூராட்சி சபைகளில் புகுத்துவதனால் உள்ளூராட்சியின் அரசியல் மற்றும் அபிவி ருத்தி செயற்பாடுகளுக்கு எந்தளவுக்கு இவர் களினால் பங்களிப்பு செய்ய முடியும் என்ற கேள்வி எழுகின்றது, (Manjula Fernando;2018) அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் 25% பெண் பிரதிநிதிகளினை உள்வாங்குவதில் நடைமுறையிலுள்ள சவால்கள் இதனால் சில சபைகள் 25% ஆன பெண் பிரதிநிதிகளினை கொண்டிருக்காமல் ஆட்சியமைக்க முடிந் தமை, கட்சிகள் பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான வெட்டுப்புள்ளி இத் தேர்தல் முறையில் இல்லாமையினால் மக்களது ஆதரவு மிகக் குறைவாக உள்ள புதிய கட்சிகளும் உறுப் பினர்களினைப் பெற்றுக் கொள்கின்றன. இது வெற்றி பெற்ற பெரிய கட்சிகள் ஆட்சிய மைப்பதிலும் இஸ்திரமாக உள்ளூராட் சியினை முன்னெடுப்பதற்கும் தடையாக அமைகின்றது போன்ற குறைபாடுகளும் இப்புதிய கலப்புத் தேர்தல் முறையில் காணப் படுவதாக ஆய்வாளர்களினால் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது.

## முடிவுரை

முன்னைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கு மாற்றீடாகக் கொண்டு வரப்பட்ட புதிய 60:40 என்ற கலப்பு முறைத் தேர்தலானது சில ஜனநாயக ரீதியான நல்ல அம்சங்களினைக் கொண்டுள்ள போதும் குறிப்பிட்டுக் கூறக் கூடிய பல குறைபாடுகளி னையும் கொண்டுள்ளமையினால் இத் தேர் தல் முறை மறு சீரமைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் மாகாணசபைத் தேர்தல் பழைய விகிதாசார பிரதிநிதித்துவ முறைப்படி நடாத்தப்பட வேண்டும் என்கின்ற உரை யாடல்கள் மேலழுந்துள்ளன. எனவே அடி மட்ட ஜனநாயக ஒழுங்கமைப்பான உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளினைத் தெரிவு செய்கின்ற தேர்தல் முறையானது மக்கள் விருப்பு, பொறுப்புக் கூறல், இஸ் திரமான ஆட்சி, குறித்த உள்ளூராட்சியின் அனைத்துப் பிரதேசங்களினையும் உள்ள டக்கிய பிரதி நிதித்துவம், உண்மையான பெண் பிரதிநிதிகளுக்கான வாய்ப்புக்கள், குறைந்த அரச செலவீனங்கள், வெற்றி பெற்ற கட்சிகளுக்கான மேலதிக சலுகைகள் மற்றும் வாய்ப்புக்கள் போன்றவற்றினைக் கருத்திற்கொண்டு புதிய தேர்தல் முறை உருவாக்கப்படுகின்ற பொழுதே அல்லது தற்போது உள்ள தேர்தல் மறுசீரமைக்கப் படுகின்ற பொழுதே உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமை வாக தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் வினைத்திறனாக செயற்பட முடியும். எனவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறையினை திருத்தவோ அல்லது புதிய தேர்தல் முறையினை உருவாக்குவதாகவோ இருந்தால் முறையாக மக்கள் கருத்தறியப்பட வேண்டும். துறைசார் நிபுணர்கள் போதி யளவு உள்வாங்கப்பட வேண்டும் மற்றும் ஏனைய நாடுகளது அனுபவங்களினை உள்வாங்கிக்கொள்ளல் போன்ற வழிமுறை களினூடாக தேர்தல் முறை உருவாக்கப் படுகின்ற பொழுதே அது வினைத்திறனாக

செயற்பட்டு உரிய வழியில் மக்கள் பிரதி நிதிகளினை தெரிவு செய்கின்ற மார்க்கமாக குறித்த தேர்தல் முறை அமையும்.

Reference


1. Abhayewardhana.H.A.PNanayakkara.G, Hettige. S.T. Keertiratne J.G. Selvakumaran.N., (1999) Report of the Commission of Inquiry on Local Government Reforms, The Department of Government Printing, Sri Lanka.

2. மணிவாசகர்.அ.வே.(1994). உள்ளூராட்சி அரசாங்கம்:ஒரு எண்ணக்கரு கண்ணோட்டம், சிந்தனை தொகுதி VI, இதழ் 1 & 11. யாழ்ப்பாண பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்.

3. Local Authorities, http:// www.lgpc.gov.lk/eng/page_i=66

4. இரகுநாதன்.க (2008),தேர்தல் முறைமை களும் அவற்றின் பரிமாணங்களும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

5. Local Authorities Elections 2018, The Department of Government Information Sri Lanka, https://election.news.lk/

6. Manjula Sanderatne, Local Government Polls: Voter Turnout over 65%, Sunday Observer, 11.02.2018.

7. Javid Yusuf, Election reform process must be handled carefully to avoid instability at Parliamentary elections, The Sunday Times, 25.02.2018.

8. Nimal Sanderatne, Economic implications of the local government elections: New challenges, The Sunday Times, 18.02.2018.

9. Manjula Fernando,Just implement the law, Fulfill the 25% Quota – Rights activists, Sunday Obseve, 25.02.2018.